






# கொலோசெய சபையின் கள்ளப்போதகமும் அதன் விளைவுகளும்

கொலோசெய சபையில் சாத்தானின் வஞ்சகத்தினால் ஏற்பட்டிருந்த குழப்பமான கள்ளப்போதகத்தை மாற்றுவதற்காக அப்போஸ்தலனாகிய பவுல் பெரிதும் முயற்சி செய்ததைக் குறித்து இந்த தியானத்தில் பார்க்கப் போகிறோம். யூதர்களின் கடுமையான சட்டதிட்டங்களும், புறஜாதிகளின் விசித்திரமான பழக்கவழக்கங்களும் ஒன்றாக இணைந்து அங்கே கள்ளப் போதகம் ஏற்பட்டிருந்தது. இந்த கள்ளப் போதகத்தில் கொலோசெய சபையின் அங்கத்தினர்களில் சிலரும் கவரப்பட்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் அக்கம்பக்கத்தில் இருந்த அவிசுவாசிகளோடு நெருக்கமான பழக்கம் வைத்திருந்ததே இதற்குக் காரணமாகும்.

பவுல் எபேசுவிலே மூன்று ஆண்டு ஊழியம் செய்து கொண்டிருந்த நாட்களிலே கொலோசெய சபை ஏற்பட்டிருந்தது(அப் 19). பவுல்தான் இந்த சபையை ஸ்தாபித்ததாக நாம் எண்ணிவிடக் கூடாது. இந்த சபை உருவாகக் காரணமாக இருந்தவர் எப்பாப்பிரா என்று நம்பப்படுகிறது. ஒரு வேளை இவர் எபேசுவிற்கு பிரயாணத்தின் நிமித்தமாக வந்திருந்த காலத்தில் பவுல் அப்போஸ்தலனின் ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டிருக்கலாம். எபேசுவில் இருந்து கொலோசெய பட்டணத்திற்கு வந்த பிறகு அவர் இச்சபையை ஸ்தாபித்திருக்கலாம். இது ஆரம்பிக்கப்பட்டு சில ஆண்டுகள் கழித்து, அதில் பயங்கரமானதொரு கள்ளப்போதகம் ஊடுருவ ஆரம்பித்தது. இதற்கு, சபை சரித்திரத்தில் கொலோசெய கள்ளப்போதகம் என்று பெயர்.

நம்முடைய காலத்திலேயும் அநேக தவறான நம்பிக்கைகளும், தவறுதலான உபதேசங்களும் அதிகமாகிக் கொண்டே வருவதைக் காண்கிறோம். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இன்று குழப்பமானதொரு நிலையில் இருப்பது விசனிக்கத்தக்கதே. மூழ்கிக் கொண்டிருக்கிற ஒருவன், ஒரு புல்லையாவது பிடித்துக் கொண்டால் தப்பித்து விடலாம் என நினைப்பது போல, அவர்களும் கள்ளப்போதகர்கள் சொல்வதை நம்பிக் கொண்டிருப்பதற்கே அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். காட்டாற்றில் புல்லைப் பிடித்து தப்பிப்பதென்பது நடக்கக்கூடிய காரியமா? பல கள்ளப்போதகங்கள் ஆரம்பகால சபைகளில் ஊடுருவி இருந்ததை சபைசரித்திரம், தெளிவாக எடுத்துக் காண்பிக்கிறது. உண்மையான சபைகள் அவைகளைக் குறித்து தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது. ஏனென்றால், உண்மையான விசுவாசிகள் அடங்கிய சபை, அதுபோன்ற கண்ணிகளில் மாட்டி விடாமல் இருக்க அவை மிகவும் உதவியாக இருக்கும்.

பாவம், எப்பாபப்பிரா! அப்போதுதான் வளர்ந்துகொண்டு வரும், தங்களுடைய கொலோசெய சபையில் நுழைந்துவிட்ட கள்ளப்போதகத்தைக் குறித்து திகிலடைந்து, அவர் அங்கிருந்து ரோமப்பட்டணத்திற்கு ஒரு நீண்ட பயணம் மேற்கொள்கிறார்.(கொலோ 4:12-13) அங்கு சிறையில் இருந்த பவுல் அப்போஸ்தலரிடம் சந்தேகத்தைக் கேட்டு தெளிவுபெறுவதற்காக அங்கு சென்றார். பவுல் அப்போஸ்தலன், ரோம சிறையில் இருந்து கொலோசெய சபைக்கு இந்த நிருபத்தை எழுதுகிறார். இது கி.பி. 60 - 62 ஆண்டுகளுக்கிடையே எழுதப்பட்டிருக்கிறது. கொலோசெய சபையில் எழுந்த கள்ளப்போதகம், (Gnosticism)நாஸ்டிக் என்கிற வகையிலான கள்ளப்போதகங்களோடு நெருக்கமான தொடர்புடையது. யெகோவாவின் சாட்சிகள் போன்ற வகையிலான கள்ளப்போதகங்கள் ஏற்படக்காரணமாயிருந்தது இந்த கள்ளப்போதகம். இக்காலகட்டங்களில்கூட இந்த கள்ளப்போதகத்தின் சுவடுகள், பல எழுப்புதல் ஊழியங்களிலும் ஊடுருவி இருப்பதைக் காணலாம். உண்மையில் சொல்வதானால் இந்த கள்ளப்போதகமே இப்போது மீண்டும் புத்துணர்ச்சி பெற்று புதுமையான விதங்களில் மனிதர்களிடையே பரவி வருகிறது. இவர்கள் கிறிஸ்தவ சம்பந்தமான வார்த்தைகளையும், வேதவார்த்தைகளையும் உபயோகித்து வந்தாலும், இவர்கள் கூறும் தத்துவங்களுக்கும் உண்மையான கிறிஸ்தவத்துக்கும் கொஞ்சமும் சம்பந்தமேயில்லை. ஆகவே உண்மையான விசுவாசிகள் இப்படிப்பட்டவர்களிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டும்.

(Gnosticism)நாஸ்டிக் என்பது விளங்காத, புதிரான ஒரு தத்துவம். மனிதர்கள் தங்களுக்குள்ளேயே மறைந்திருக்கின்ற மெய்ஞானத்தையும், அபூர்வமான சக்தியையும் கண்டுபிடிப்பதைக் குறித்து இந்த தத்துவம் கூறுகிறது. இதை அவர்கள் பலவிதங்களில் கண்டுபிடிக்கலாம் என்று கூறுகிறார்கள். கனவுகள், காட்சிகள் மூலமாகவும், தேவர்களின் மூலமாகவும், கடவுளையே நேரடிடையாக தொடர்பு கொள்ளுவதின் மூலமாகவும், யோகா போன்ற உடற்பயிற்சிகளின் மூலமாகவும், மனதை தொட்டு. அதை ஒரு ஊடகமாக கொண்டு மெய்ஞானத்தையும், அபூர்வசக்திகளையும் அடையலாம் என்கிறதான தத்துவம் மனிதர்களிடையே பரப்பப்பட்டு வருகிறது. உணர்ச்சி வசப்பட்ட நிலையும், சரீரத்தில் இருந்து விடுபட்டு இருப்பதான ஒரு நிலையும், தனித்தனியாகவோ அல்லது ஒன்று சேர்ந்தோ இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. அத்தோடுகூட இன்னும் சில விளங்காத தத்துவங்களான வானசாஸ்திரம், நட்சத்திரங்களைக் கொண்ட கணிப்புகள், வானலோகில் சஞ்சரித்தல் முதலான காரியங்களிலும் மக்களின் ஆர்வம் தூண்டிவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நவீன காலத்து தத்துவங்கள் பெரும்பாலும் மார்மோனிஸம்(Marmonism) என்கிற பயங்கர கள்ளப் போதகத்தோடு ஒத்துப் போவதாயிருக்கிறது. புதிரான(Occultism), மார்மோனிஸம், நவீனயுகத்து தத்துவங்கள், இந்து மார்க்க போதனைகள் இவைகளெல்லாம் ஒரு அபூர்வமான சக்தியை மனிதர்கள் பெற்றுக் கொள்வதைக் குறித்து போதிக்கிறது. இந்த சக்தியை அடைய பலவிதமான உபாயதந்திரங்கள் கையாளக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மெய்மறக்கச் செய்யும் தியானநிலை(transcendental meditations), அக்குபங்சர்(acupuncture) - யோகா போன்ற உடலை வருத்தக்கூடிய காரியங்கள், Zoroastrianism முதாலான பல்வேறு வழிகளில் இந்த சக்தியைப் பெற்றுக் கொள்ளும்படி மனிதர்கள் ஏவப்பட்டுக்

கொண்டேயிருக்கிறார்கள். இவைகளெல்லாம் உண்மையான சத்தியமாகிய வேதாகமத்திற்கு எதிராக விதைக்கப்பட்டிருப்பவை. அவை சாத்தானின் ராஜ்யத்தை இன்னும் வலுப்படுத்துகிறது.

### ஆவிக்குரிய அற்புதசுகம்

நவீன யுகத்தவர்கள் தற்போது சொல்வது, ஒருவனைக் குணப்படுத்தும் ஆற்றல் அவனுக்குள்ளேயே மறைந்து கிடக்கின்றது. எண்ணங்களை உபயோகித்து, ஆக்கவும் அழிக்கவும் கூடிய சக்திகளை ஒருவன் தனக்குள்ளேயும் புறம்பேயும் உண்டுபண்ணிக் கொள்ள முடியும் என்று இந்த தத்துவவாதிகள் கூறுகின்றனர். அப்படியாக அவர்கள் அழிவுக்குரிய எண்ணங்களை அதிகமதிகமாக வளர்த்துக் கொள்ளும்போது, அவர்களுடைய சரீரங்கள் பலவீனமாகின்றது. சுகம், பெலனடைவதெல்லாம் அவனவனுக்குள்ளேயிருந்தே வெளிப்படுகிறது. நமது ஆவியே சரீரத்தை சௌக்கியப்படுத்துகிறது.

**சர்வசக்திகளின் இணைந்த செயல்பாடு(**Pantheism: **)**: இதை சார்ந்தவர்கள் சொல்லுவதாவது, கடவுள் என்றெல்லாம் ஒன்றுமில்லை; ஆனால் இந்த அண்டசராசரங்களிலும் உள்ள அனைத்து சக்திகளும் ஒன்றாக சேர்ந்து, ஒன்றையொன்று சார்ந்து, இவ்வுலகத்தை செயல்பட வைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த அண்டசராசரங்களே கடவுளுக்கு ஒப்பானது என்று இவர்கள் கூறுகிறார்கள்.

### வேதாகமம் கூறுவது என்ன? இவ்வித கள்ளப்போதகம் கூறுவது என்ன?

விசுவாசிகளுடைய உலகவாழ்க்கைக்கும், ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் தேவையான அனைத்தையும் இரட்சகரின் தெய்வீக சக்தியானது, நமக்கு கொடுத்திருப்பதாக வேதாகமம் கூறுகிறது. **தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே, ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும்** அவருடைய திவ்விய வல்லமையானது **நமக்குத் தந்தருளினது . . .** 2பேது 1:3. நமக்கு ஆதாரமே இயேசுக்கிறிஸ்துதான்; அவரே நமக்குப் போதுமானவராகவும் இருக்கிறார். சிருஷ்டிப்புக்கெல்லாம் ஆதிகாரணர் அவரே(கொலோ 1:16); இரட்சிப்புக்கு ஆதிகாரணரும் அவரே(அப் 4:12); பரிசுத்தமாக்குகிறவரும் அவரே(எபே 5:26,27, எபி 10:10); மகிமைப்படுத்துவதும் அவரே(ரோம 8:30). இவ்வளவு விசேஷமான காரியங்களை அவர் விசுவாசிகளுக்கு சொந்தமாகக் கொடுக்கிறபடியால், நாம் சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும், திருப்தியோடும் இன்னும் அதிகமதிகமாக வளர்ந்து பூரணமடைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறோம். இவ்வளவு ஆசீர்வாதங்களையும் தவிர்த்து வேறு எதையும் தேடி நாம் அலைய வேண்டியதில்லை. அதற்கு பதிலாக ஆவிக்குரிய வாழ்க்கையில் இன்னும் வளருகிறவர்களாகவும், கடவுளிடம் நன்றியில் பெருகுகிறவர்களாகவும் வளர வேண்டும். நம்முடைய உலக தேவைகளை அவர் பார்த்துக் கொள்ளுவார்.

உலக நன்மைகளை முன்நிறுத்தி நடைபெற்று வருகின்ற இவ்வகையிலான கள்ளப்போதகங்கள் ஆதிசபை காலத்திலேயே தொடங்கிவிட்டது. அதனால்தான் தேவன் வேதாகமத்தின் மூலமாக, இயேசு நமக்கு எல்லா வகையிலும் போதுமானவராக இருக்கின்றார் என்கிற கருத்தை ஆணித்தரமாக

தெரிவித்துவிட்டார். இது சம்பந்தமான வசனங்கள் பலவற்றை நான் உங்களுக்கு முன்பாக வைக்கிறேன். அவைகளை நீங்கள் நன்றாக ஆராய்ந்து படித்து, அவைகளை உங்கள் உள்ளத்தின் ஆழத்திலே பதிய வைத்துக் கொள்ள வேண்டும். **ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்** கொலோ 2:9,10. பரிபூரணமுள்ளவர் இயேசுக்கிறிஸ்து. இவரைக் காட்டிலும் வேறு எதுவும் பரிபூரணத்தைத் தராது. கொலோசெய சபையில் நுழைந்த கள்ளப்போதகம் போன்று பிறகாரியங்களை விசுவாசிகள் நாடிப் போக அவசியமேயில்லை.

துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் குறித்த சில வசனங்களை கீழே காணலாம். இவைகளுக்கெல்லாம் மேற்பட்ட கர்த்தாதி கர்த்தர் நமது இரட்சகர்:
**துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்** கொலோ 2:15

**மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும் தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்** ரோம 8:36-37

**அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா, பிதாவே என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திரசுவீகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.** ரோம 8:15

**எல்லா துரைத்தனத்திற்கும் அதிகாரத்திற்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக,** எபே 1:20

**ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.** எபே 6:12

**அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார். தேவதூதர்களும், அதிகாரங்களும், வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.** 1பேது 3:22

கீழ்காணும்விதமாக பவுல் கொலோசெய சபையை ஊக்கப்படுத்துகிறார்:
**ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள்**

**போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.** கொலோ 2:6,7

அவர்களை ஊக்கப்படுத்திய பிறகு அவர்களுக்கு ஒரு முக்கியமான எச்சரிப்பையும் கொடுக்கிறார்: **லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களை கொள்ளை கொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல.** கொலோ 2:8

6-ஆம் வசனத்தில் நாம் பார்க்கிற, **அவருக்குள் நடந்து கொண்டு** என்று சொல்லுகிற வார்த்தை சாதாரணப்பட்டதல்ல. அது அநேகம் ஆழமான அர்த்தங்களை உள்ளடக்கியுள்ளது. தினசரி வாழ்க்கையில் ஒரு விசுவாசி கடைப்பிடிக்க வேண்டிய அநேக காரியங்களை அது வெளிப்படுத்துகிறது.

## அவருக்குள் நடத்தல்

கீழ்காணும் வசனங்கள் அவருக்குள் எப்படி நடப்பது என்பதை விளக்குவதாக இருக்கின்றன. **சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, . . . கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்,** கொலோ 1:10

**புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்** கொலோ 4:5

**ஆனபடியினால், கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டவர்களாய் இருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.** ரோம 8:1

**மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.** ரோம 8:4

**களியாட்டும், வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம். துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமல் இருந்து, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்.** ரோம 13:13,14

**தேவன் அவனவனுக்குப் பகிர்ந்ததெப்படியோ, கர்த்தர் அவனவனை அழைத்ததெப்படியோ, அப்படியே அவனவன் நடக்கக் கடவன். எல்லா சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன்.** 1கொரி 7:17

**நாம் காணப்படுவதை கண்டு நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்** 2கொரி 5:6.

**நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும் மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது** 2கொரி 10:3,4

**பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்** கலா 5:16

**நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்** கலா 5:25

**ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்** எபே 2:10

**கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்** எபே 5:2

**மூப்பராகிய சங்கத்தார் உன் மேல் கைகளை வைத்த போது தீர்க்கசரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே** 1தீமோ 4:14

(பி.கு. கைகளை வைக்குதலைக் குறித்து உங்களுக்கு எந்த சந்தேகமும் இருக்க வேண்டியதில்லை. மூப்பர் ஸ்தானம் என்பது, மூப்பர், கண்காணிகள் இருக்கின்ற பெரிய சபைகளில் அக்காலங்களில் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட பதவி. நமக்கு அந்த வசதி இல்லை. அதற்கு பதிலாக போதகரும், சுவிசேஷகருமாகிய நான், உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்த சமயத்தில் உங்கள் தலைகளின் மீது கைகளை வைத்து ஞானஸ்நானம் கொடுத்தேன். இந்த சடங்கை நிறைவேற்ற அதுவே போதுமானதாயிருக்கிறது. இப்படியாக இந்த வசனத்தையும் நாம் நிறைவேற்றுகிறவர்களாக இருக்கிறோம்)

**. . . நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன் 2**தீமோ 1:12

**உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலைகொண்டிரு. இப்படி செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்** 1தீமோ 4:16

**முதிர்வயதுள்ளவனை கடிந்து கொள்ளாமல், அவனைத் தகப்பனைப் போலவும், பாலியபுருஷரை சகோதரரைப்போலவும், முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும் பாவித்து புத்தி சொல்லு** 1தீமோ 5:1,2

**விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்** எபி 11:6

**தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம். தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான்;**

**பொல்லாங்கன் அவனைத் தொடான்** 1யோவா 5:18

**பிரியமானவர்களே, உலகத்திலே அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியுங்கள்** 1யோவா 4:1

**. . . நீதியைச் செய்கிறவன், அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோல தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்** 1யோவா 3:7

**அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமமும் கட்டளையிடப்படவும் இல்லை** அப் 4:12

**மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்** யோவா 8:12

கொலோசெய சபையை கலக்கிக் கொண்டிருந்த கள்ளப் போதகர்கள், தங்களுக்கு ஒரு விசேஷித்தவிதமான வல்லமை இருப்பதாகவும், அது ஆவிக்குரிய வகையில் பிரத்தியேகமான சிலருக்கு மாத்திரமே கிடைக்கும் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் பவுலோ அதற்கு நேர்விரோதமான கருத்தை தெரிவிக்கிறார் பாருங்கள்:

> இரட்சிப்படைவதற்கும், பரிசுத்தமாகுதலுக்கும், மகிமையை பெற்றுக் கொள்வதற்கும் தேவையான அறிவு கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவிடம் மாத்திரமே அளவில்லாமல் காணப்படுகிறது. **ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்** ரோம 11:33
>
> இந்த சத்தியம் எல்லாருக்கும் உரியது. **. . . யூதரானாலும், கிரேக்கரானாலும், எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்** 1கொரி 1:24

ஆகவே எவ்வகையில் பார்த்தாலும் விசுவாசிகள், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக பரிபூரணமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். கிறிஸ்துவினுடைய நீதியினாலும், ஆவிக்குரிய வளர்ச்சியை அடைவதற்குத் தேவையான சகலவிதமான பரலோக நன்மைகளை கிருபையாக கொடுத்திருப்பதாலும் விசுவாசிக்கு சகலமும் பரிபூரணமாயிருக்கிறது. இதற்கு மேல் அவனுக்குத் தேவையானது ஒன்றுமில்லை. அதைத்தான் இந்த வசனம் சொல்லுகிறது: **. . . அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்** கொலோ 2:10

அது மாத்திரமல்ல, ஒரு விசுவாசி, இயேசுக்கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாகவும்,

உயிர்த்தெழுதலுக்குள்ளாகவும் இணையும்போது, அதற்கு பிரதிபலனாக, கடவுள், கிறிஸ்தவர்களை தமது குமாரனுடைய பரிசுத்தநிலைக்கு ஒப்பாகவே கருதுகிறார். . . . **அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்** எபே 1:3

நாம் கிறிஸ்துவுக்குள் பூரணமாயிருக்கிறோம் என்பதை நிரூபிக்க மேலும் மேலும் சொல்லிக் கொண்டே போகலாம். நம்முடைய தேவைகளை சந்திப்பதற்கு, கிறிஸ்துவைக் காட்டிலும் வேறெந்த சக்தியும் வழிவகைகளும் நமக்குத் தேவையேயில்லை. ஆகவே கொலோசெய சபையில் எழும்பின கள்ளப்போதகத்தினால் ஒரு பிரயோஜனமும் இல்லை.

தற்காலங்களில் நாமகரண சபைகளில் நிலவி வரும் ஆவிக்குரிய குழப்பங்களில், கள்ளப்போதகர்களுக்கு பெரும் பங்கிருக்கிறது. அவர்கள் சபைகளில் இந்தவிதமான வித்தியாசமான சக்திகளை(Gnosticism) புகுத்தி மக்களை ஆவிக்குரிய குழப்பநிலமைக்கு ஆளாக்கியிருக்கிறார்கள். தாங்கள்தான் கடவுளின் பிரதிநிதிகள் என்று பிரசங்கித்து ஜனங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதிகம் விளங்காத கிறிஸ்தவர்களை, அவர்கள் விசுவாசத்தையும், இயேசுவின்மீது அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையையும்விட்டு வழிவிலகச் செய்து, சாத்தானின் பாதைக்கு கூட்டிச் சென்றுவிடுகிறார்கள். இன்னும் அதிகமான, வல்லமையான ஆவிக்குரிய வரங்களைப் பெற்றுத்தருவதாக ஏமாற்றி, அவர்களை அசுத்தஆவிகளிடம் அடிமைப்படுத்திவிடுகிறார்கள், இந்த மாதிரியான பயங்கரத்துக்கு நாம் எச்சரிக்கையாயிருப்போமாக. நமக்கு அருமையானவர்கள் இந்த மாதிரியான வஞ்சக வலையில் விழுந்துவிடாதபடிக்கு அவர்களையும் எச்சரித்து நடத்துவோமாக.

**கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு வழங்கப்பட்ட சில பிரத்தியேகமான பெயர்கள்**

- ***அல்பாவும் ஒமேகாவும் - வெளி 21:6***
- ***மூலைக் கல் - எபே 2:20***
- ***மரித்தோரில் இருந்து எழுந்த முதற்பேறானவர் - கொலோ 1:18***
- ***பிரதான ஆசாரியர் - எபி 3:1 (நமது பாவங்களைக் கழுவக்கூடிய பாவமில்லாத ஆசாரியர்)***
- ***இம்மானுவேல் - மத் 1:23 (தேவன் நம்மோடிருக்கிறார்)***
- ***ராஜாதி ராஜன், கர்த்தாதி கர்த்தன் - வெளிப் 19:16***
- ***பிதாவுக்கு ஒரே பேறான குமாரன் - யோவா 1:14***
- ***வார்த்தை - யோவா 1:1***
- ***தேவனுடைய வார்த்தை - வெளிப் 19:13***

இவ்வளவு மகிமையும் மகத்துவமும் வாய்ந்த கர்த்தர் நமது சபைக்கு தலையாயிருக்கும்போது, வேறு சக்திகளை நாம் எதற்காக நாடிப் போகவேண்டும்? எந்தவிதமான கள்ளப்போதகத்திற்கும் நாம் இடங்கொடுத்து நமது சமாதானத்தை இழந்துவிடாதபடிக்கு நாம் எச்சரிக்கையாயிருப்போமாக.

------ (8-4-07, 15-4-07 ஆகிய நாட்களில் மதுரை சபையில் பிரசங்கிக்கப்பட்ட தியானத்தின் சாராம்சம்)